# T20 Current Affairs

# for

# TNPSC

# Dec - 2021

Towards Your Success


THULIRR IAS ACADEMY

# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,

Anna Nagar West, Chennai – 40

http://thulirracademy.in/ | Mobile # +91 9445065552 | Telegram: Thulirr Current Affairs

# Table of Contents


தமிழக நிகழ்வுகள் ........ 3
இந்திய நிகழ்வுகள் ........ 10
பொருளாதாரம் ........ 13
உலக நிகழ்வுகள் ........ 14
சுற்றுச்சூழல் ........ 15
அறிவியல் & தொழில்நுட்பம் ........ 15
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ........ 16
திட்டம் ........ 17
மாநாடுகள் ........ 18
பாதுகாப்பு ........ 18
விருதுகள் ........ 20
விளையாட்டு நிகழ்வுகள் ........ 22
புள்ளி விவரம் ........ 22
புத்தகம் ........ 23
முக்கிய தினம் ........ 23



**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirraacademy.in/currentaffairs.php?ca_category=T20-T




**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# தமிழக நிகழ்வுகள்

- **தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில் 30 நாள் இந்திய நடன விழா**
  - தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் 30 நாள் இந்திய நடன விழா சென்னை அருகே உள்ள மாமல்லபுரத்தில் தொடங்கியது.
- **இன்னுயிர் காப்போம் திட்டம்**
  - சாலை விபத்துகளில் சிக்குவோரைக் காக்கும் 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' என்ற புதிய திட்டத்தை மேல்மருவத்தூரில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கிவைத்தார்.
  - இந்தத் திட்டத்தின் கீழ், சாலை விபத்துகளால் பாதிக்கப்படுவோரின் முதல் 48 மணிநேர அவசர மருத்துவ சிகிச்சை செலவுகள் அனைத்தையும் அரசே ஏற்கும் என அவர் தெரிவித்தார்.
- **தமிழக அரசுக்கு விருது**
  - 'ஆசாதி கா அம்ரித்' மஹோத்சவ் பிரச்சாரத்தின் போது நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொற்றா நோய் (NCD) பரிசோதனைகளை மேற்கொண்டதற்காகவும், மூன்றாவது அதிக எண்ணிக்கையிலான ஆரோக்கிய அமர்வுகளை நடத்தியதற்காகவும் தமிழ்நாடு அரசு இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது.
- **"TN Police CLAPP"**
  - நகரத்தில் உள்ள காவலர்களுக்கு விடுமுறைக்கு விண்ணப்பிப்பதற்கும், எந்தத் தொந்தரவும் இல்லாமல் விரைவாக அனுமதி பெறுவதற்கும் மொபைல் அடிப்படையிலான புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. தொடக்கத்தில், இது டிசம்பர் 31 முதல் ஆயுதக் காப்பகத்திற்குச் செயல்படுத்தப்படும்.
- **சிட்கோ, தாய்கோ வங்கி ஒப்பந்தம்**
  - சிறு மற்றும் குறுந் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், சிட்கோ மற்றும் தாய்கோ வங்கியுடன் தொழில் முதலீட்டுக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.
- **நீதி, பொதுப் பாதுகாப்பில் தமிழகம் முதலிடம்**
  - 2021-ம் ஆண்டுக்கான நீதி, பொதுப் பாதுகாப்பில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. யூனியன் பிரதேச மாநிலங்களில் தில்லி முதலிடத்தில் உள்ளது.
  - முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பிறந்த தினத்தை நல்லாட்சி தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- **பத்திரிகையாளர்களுக்கு நல வாரியம்**
  - பத்திரிகையாளர்களின் இரு குழந்தைகளுக்கு ஆயிரம் ரூபாய் முதல் ரூ.6 ஆயிரம் வரையில் கல்வி உதவித் தொகைகள் அளிக்கப்படும்.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தமிழர் நலனுக்கு தனி இணையம்**
  - தமிழர்களின் நலனுக்கென தனி இணையதளத்தை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தொடக்கி வைத்தார். தலைமைச் செயலகத்தில் அவர் புதிய இணையதளத்தை தொடக்கினார்.
- **முதல்வரின் காப்பீடு திட்டம் செய்தியாளர்கள் இணைப்பு**
  - முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தில், செய்தித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள், பருவ இதழ் செய்தியாளர்களை பயனாளிகளாக இணைத்து அரசாணை வெளியிடப்பட்டது.
  - 2009 ஜூலை 23 ஆம் நாள் உயர் ரக மருத்துவ சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் புதிய காப்பீட்டுத் திட்டத்தைத் தமிழக அரசு அறிமுகம் செய்தது.
  - இத்திட்டம் ஜூலை 2011-ல் மேம்படுத்தப்பட்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் எனப் பெயர் மாற்றப்பட்டது.
  - செப்டம்பர் 11 2018-ல் இந்திய அரசின் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்துடன் இணைக்கப்பட்டு மத்திய மாநில அரசுகள் தவணைத் தொகையைப் பங்கிட்டுக் கொண்டனர்.
- **தமிழ்த்தாய் வாழ்த்து அரசின் மாநிலப் பாடல்**
  - தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழக அரசின் மாநிலப் பாடலாக அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்தார். தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.
- **கோடியக்கரை வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம்**
  - கோடியக்கரை சரணாலயத்தில் 28,000 ஹெக்டேர்களை சேர்க்க வனத்துறை திட்டமிட்டுள்ளது.
  - 1967 ஆம் ஆண்டு இந்த சரணாலயம் உருவாக்கப்பட்டது, இது இந்தியாவில் உள்ள பாலூட்டி இனமான பிளாக்பக் ஆண்டிலோப் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டது.
- **பறவைகள் சரணாலயமாகிறது "கழுவேலி ஈரநிலம்"**
  - விழுப்புரம் மாவட்டத்திலுள்ள 'கழுவேலி ஈரநிலத்தை தமிழகத்தின் 16-ஆவது பறவைகள் காப்பகமாக அறிவித்து அரசு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.
- **பசுமை தமிழ்நாடு இயக்கம்**
  - 2030-31 ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தில் காடு மற்றும் மரங்களின் பரப்பளவை தற்போதைய 23.8% லிருந்து 33% ஆக உயர்த்துவதை இலக்காகக் கொண்ட 'பசுமை தமிழ்நாடு இயக்கம்' 2021-22 இல் செயல்படுத்த மாநில அரசு அதன் நிர்வாக மற்றும் நிதி அனுமதியை வழங்கியுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பூங்கா**
  - சென்னையில் பள்ளிக்கரணை சதுப்பு நில சூழலியல் பூங்காவை, காணொலிக்காட்சி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- **சங்க இலக்கிய நூல்கள் கன்னடத்தில் மொழிபெயர்ப்பு**
  - மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சார்பில் சங்க இலக்கிய நூல்கள் முதல் முறையாக கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- **25 மொழிகளில் தொல்காப்பியம் மொழிபெயர்ப்பு**
  - தொல்காப்பியத்தை 10 இந்திய மொழிகளிலும், 15 உலக மொழிகளிலும் மொழிபெயர்க்க தரமணியில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
  - செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் துவக்கம் - 2006.
  - தலைவர் - மு.க.ஸ்டாலின்.
- **இசைப் பேரறிஞர் விருது**
  - நாதஸ்வர கலைஞர் சேஷம்பட்டி சிவலிங்கத்துக்கு இசைச்சங்கம் வழங்கும் இசைப் பேரறிஞர் விருது வழங்கப்பட்டது.
- **தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான தேசிய விருது**
  - மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளிப்பதில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சமூக நீதி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் அமைச்சகம் புது தில்லியில் நடைபெறும் விழாவில் இதற்கான விருதைப் பெறவுள்ளது.
  - தமிழகத்தைச் சேர்ந்த 6 மாற்றுத்திறனாளி குடிமக்களுக்கும் அவர்களின் முன்மாதிரியான சேவைக்காக குடியரசுத் தலைவர் விருதுகள் வழங்கப்படவுள்ளன.
- **மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பணிபுரிந்தோருக்கு விருதுகள்**
  - மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த முறையில் சேவை புரிந்ததற்கான சமூகப் பணியாளர் விருது ஸ்மிதா சாந்தகுமார் சதாசிவனுக்கு வழங்கப்பட்டது. சிறந்த நிறுவனமாக விருதுநகர் மாவட்டம் சப்தகிரி மறுவாழ்வு அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.
- **எழுத்தாளர் கி.ரா.வுக்கு நினைவரங்கம் கட்ட அடிக்கல் நாட்டு விழா**
  - சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர், கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபம் (கி.ரா) கி.ராஜநாராயணனுக்கு கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நினைவரங்கம், சிலை மற்றும் நூலகம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
  - கோபல்லபுரத்து மக்கள்- சாகித்திய அகாடமி விருது பெற்றது.
  - கரிசல் வட்டார அகராதி என்று மக்கள் தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடியாவார்.
- **முன்னாள் தமிழக ஆளுநர் கே.ரோசய்யா காலமானார்**
  - தமிழ்நாட்டின் ஆளுநராக கடந்த 2011-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31-ஆம் தேதி முதல் 2016- ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30-ஆம் தேதி வரை பதவி வகித்தார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- ஆந்திர முதல்வராக இருந்த ஒய்.எஸ். ராஜசேகரரெட்டி மறைவுக்குப் பிறகு ஆந்த மாநிலத்தின் முதல்வராக 3 மாதங்கள் பதவி வகித்தார்.

❖ **தாழ்த்தப்பட்டோர்-பழங்குடியினர் நல ஆணைய உறுப்பினர் செயலாளர் நியமனம்**

- தமிழ்நாடு மாநில தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நல ஆணைய உறுப்பினர் செயலாளராக கே.விவேகானந்தன் நியமிக்கப் பட்டுள்ளார்.
- அக்டோபர் 14, 2021-ல் தொடங்கப்பட்டது.

❖ **ஆளில்லா விமான கழகம் தொடங்கப்படும்**

- தமிழக சட்டப் பேரவையில் 2021-2022- ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் உரையில், ஆளில்லா விமானங்களுக்கென (ட்ரோன்), தமிழ்நாடு 'ஆளில்லா விமான கழகம் ஒன்று அண்ணாபல்கலைகழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனம் (எம்ஐடி) உடன் இணைந்து தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

❖ **போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழி பாடத் தாள் கட்டாயம்**

- போட்டித் தேர்வுகள் அனைத்திலும் தமிழ் மொழி பாடத் தாள் கட்டாயம் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயமாகத் தமிழ்மொழித் தேர்வு நடத்தப்படும். தமிழ் மொழித் தகுதித் தேர்வுக்கான பாடத் திட்டம் பத்தாம் வகுப்புத் தரத்தில் நிர்ணயம் செய்யப்படும். தமிழ் மொழித் தாளில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி கட்டாயம். தகுதித் தாளில் தேர்ச்சி பெறாதவர்களின் இதர போட்டித் தேர்வுத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

❖ **பாரதி பாடலை மேற்கோள் காட்டிய பிரதமர் மோடி**

- 'காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்'.
- இது 'பாரத தேசம்' என்ற தலைப்பில் மகாகவி பாரதியார் எழுதிய பாடலில் வரும் வரிகள்.
- வாராணசியில் நடைபெற்ற காசி விஸ்வநாதர் ஆலய விழாவில், பிரதமர் மோடி பாரதியின் மேற்கண்ட பாடலை தமிழிலேயே மேற்கோள் காட்டி ஹிந்தியில் விளக்கம் அளித்தார்.

❖ **சென்னை ஐஐடி மீண்டும் முதலிடம்**

- புதிய கண்டுபிடிப்புகளில் தேசிய அளவில் தலைசிறந்து விளங்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான அடல் தரவரிசை பட்டியலில் சென்னை ஐஐடி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடம் பிடித்துள்ளது.

❖ **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்**

- இதன்கீழ் உள்ள அங்கன்வாடி உதவியாளர்களின் ஓய்வு வயது 60-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

❖ **புத்தகத் தாத்தா** என்று அழைக்கப்பட்ட தமிழ் ஆர்வலர் சா.க. முருகேசன் காலமானார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டம்**

- 118.9 கிமீ தொலைவில், 61,843 கோடி நிதி ஒதுக்கீட்டில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் அமைக்கப்பட உள்ளது.
- வழித்தடங்கள் - கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரை, மாதாவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை மற்றும் மாதாவரம் முதல் சிறுசேரி சிப்காட் வரை.
- 2025 – ம் ஆண்டில் இரண்டாம் கட்ட பணி நிறைவு பெரும்.
- இந்தியாவில் 4-வது பெரிய மெட்ரோ – சென்னை.
- முதலிடம் – டெல்லி, இரண்டாம் இடம் – பெங்களூர், மூன்றாம் இடம் – கொல்கத்தா
- சென்னை மெட்ரோ முதல் கட்ட சேவை:
- ஆலந்தூர் முதல் கோயம்பேடு வரை – ஜுன் 29, 2015 (ஜெயல்லிதாவால் தொடங்கப்பட்டது)
- முதல் ஓட்டுநர் – பிரீத்தி
- மெட்ரோ திட்டம் 2009 ஜுன் 10 அன்று கோயம்பேட்டில் துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

❖ **ஏழைப் பெண்களுக்கு ஆடுகள் வழங்கும் திட்டம் - 2021**

- 6 முதல் 8 மாதங்களுக்கு உட்பட்ட ரூ.3,500 விலையுள்ள 5 ஆடுகள் 100% மானிய விலையில் ஏழை, ஆதரவற்ற பெண்களுக்கு வழங்கப்படும்.
- ஆடுகளுக்கான காப்பீட்டு தகவல்கள் முழுவதும் தமிழிலேயே இருக்க வேண்டும்.
- ஆடுகளுக்கு இரண்டு ஆண்டுகள் வரை காப்பீடு வழங்கப்படும்
- பயனாளிகள் எண்ணிக்கை, விவரங்களை மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இயக்குநரே முடிவு செய்வார்.
- காதில் 12 இலக்க எண் ப்ளாஸ்டிக் விவரச் சீட்டு பொருத்தப்படும்.

❖ **சிங்காராச் சென்னை 2.0 திட்டம்**

- தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.109.60 கோடியும் சிங்காரச் சென்னை 2.0 திட்டம் கீழ் ரூ..37.58 கோடி (147.18) என்று மொத்தம் 147 கோடி மதிப்பில் 1010 சாலைகள் சீரமைப்பட உள்ளது.

❖ **ACME - 2021**

- ACME (சர்வதேச இயந்திர கருவிகள்) கண்காட்சி 2021 சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்றது.

❖ **எட்டாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு**

- சென்னை உலகளாவிய பொருளாதார உச்சி மாநாடு 2021மற்றும் 8-வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு சென்னையில் நடைபெற்றது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **வேளாண் விளைபொருள் பட்டியலில் இருந்து பருத்தி நீக்கம்**
  - தமிழ்நாடு வேளாண் விளைபொருள் ஒழுங்குமுறைச் சட்டம்-1987-ல் அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்கள் பட்டியல் தொகுப்பிலிருந்து பருத்தியைத் தமிழ்நாடு அரசு நீக்கம் செய்து சந்தைக் கட்டண விலக்கு அளித்துள்ளது.
- **தமிழகத்தில் பிறப்பு விகிதம் குறைந்தது, புதுச்சேரியில் அதிகரிப்பு**
  - தமிழ்நாட்டில் 2017 இல் 17.2 ஆக இருந்த பிறப்பு விகிதம் 2019 ஆம் ஆண்டு 14.2 ஆக குறைந்துள்ளது என மக்களவையில் மத்திய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - புதுச்சேரியில் 2017 இல் 13.2 ஆக இருந்த பிறப்பு விகிதம் 2019 ஆம் ஆண்டு 13.3 ஆக உயர்ந்துள்ளது.
- **தமிழ்த்தாய் வாழ்த்து – தமிழக அரசின் மாநிலப்பாடல்**
  - மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய "நீராரும் கடலுடுத்த" 'தமிழ்த்தாய் வாழ்த்து இனி தமிழக அரசின் மாநிலப்பாடல்' என அறிவித்து, தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகையில் அனைவரும் எழுந்து நிற்க வேண்டுமென்று அரசாணையில், தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- **இன்னுயிர் காப்போம் திட்டம் (நம்மை காக்கும் 48)**
  - டிசம்பர் 18, 2021 அன்று இன்னுயிர் காப்போம் திட்டம் (நம்மை காக்கும் 48) மேல்மருவத்தூர், செங்கல்பட்டு மாவட்டத்தில் துவங்கப்பட்டது.
- **நெய்தல் பாரம்பரிய பூங்கா**
  - இளம் தலைமுறையினருக்கு பண்டைய தமிழர்களின் பண்பாட்டை (கடலும் கடல் சார்ந்த மக்களின் வாழ்க்கை முறை) எடுத்துரைக்கும் வகையில் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில், நெய்தல் பாரம்பரிய பூங்கா அமைக்கப்பட உள்ளது.
- **முதல்வர் காப்பீட்டுத் திட்டம்**
  - குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு – 1.20 லட்சமாக உயர்வு
  - கலைஞரின் காப்பீட்டுத் திட்டம் – ஜூலை 23, 2009 -ல் 1 லட்சம் வரை சிகிச்சை வழங்கப்பட்டது.
  - முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் (ஆண்டு வருமானம் ரூ.72,000) மற்றும் பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் – காப்பீடுத் தொகை ரூ.5,00,000 லட்சம்.
  - முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் ஜனவரி 11, 2022 முதல் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 72000 முதல் 1.20 லட்சம் ஆக உயர்வு.
- **மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு இயக்கம் (திட்டம்)**
  - டிசம்பர் 23 , 2021 அன்று மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு இயக்கம் (பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுத்தல்) துவக்கப்பட்டது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **நம்ம ஊரு திருவிழா - சென்னை, மதுரை, திருச்சி, கோவை**
  - சென்னை, மதுரை, திருச்சி, கோயம்பத்தூர் ஆகிய நகங்களில் பாரம்பரிய கலைகளின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் பொங்கல் நாளிலிருந்து மூன்று நாட்களுக்கு கலை பண்பாட்டுத்துறை சார்பில் நடத்தப்படும்.
- **தென்னை மரம் ஏறுவோருக்கு காப்பீடுத் திட்டம்**
  - தென்னை மரம் ஏறுவோர் மற்றும் பதநீர் இறக்குவோருக்கு 5 லட்சம் ரூபாய் காப்பீடு வழங்கப்படும்.
  - கேரா சுரக் ஷா காப்பீட்டுத் திட்டம் (வயது 18 முதல் 65 வரை) தென்னை வளர்ச்சி வாரியத்தால் அமல்படுத்தப்பட்டது.
- **சிற்பி திட்டம்**
  - நோக்கம்: சென்னையில் 100 மாநகராட்சி பள்ளிகளில் தலா 50 மாணவர்களைக் கொண்டு தொடங்கப்படும்.
  - சிறார் குற்ற செயல்களுக்கு தீர்வு காணவும்
  - பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வழிகாட்டுதல்.
- **அன்மியூட் சமூக நல இயக்கம் – சென்னை IIT மாணவர்கள்**
  - மாதவிலக்கின்போது தூய்மை பேணுதல் குறித்த விழிப்புணர்வு
  - பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்கள் தங்களைக் காத்துக் கொள்ளும் வகையில் தற்காப்பு பயிற்சி வழங்குதல்
- **உயர்கல்வி நிறுவனங்கள் பட்டியல் சென்னை – IIT முதலிடம்**
  - தேசிய அளவில் தலைசிறந்து விளங்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான அடல் தரவரிசைப் பட்டியல் அல்லது புத்தாக்கத்திற்கான அடல் தரவரிசைப் பட்டியலில் சென்னை – IIT தொடர்ந்து 3-வது ஆண்டாக முதலிட த்தில் உள்ளது.
- **டிசம்பர் 1 – எய்ட்ஸ் தினம்**
  - 2021 தமிழகத்தில் எய்ட்ஸ் தாக்கம் 0.18% ஆக குறைவு
  - 2001-இல் 1.13%ஆக இருந்தது.
  - தேசிய அளவில் எய்ட்ஸ் பாதிப்பு (2021-இல்) 2.04%
- சென்னை – மும்பை அதிவிரைவு ரயிலின் நூற்றாண்டு விழா (டிசம்பர் 1, 1921 முதல் டிசம்பர் 1, 2021 வரை) கொண்டாடப்பட்டது.
- சிட்கோ (SIDCO) (1971) மற்றும் தாய்கோ (TAICO) (1961) ஆகிய வங்கிகளுடன் தொழில் முதலீட்டுக் கழகம் (1949) ஒப்பந்தம் செய்துள்ளது.
- ஒருங்கிணைந்த அரசு நிதித்துறை வளாகத்திற்கு க, அன்பழகன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- ஓதுவார் அர்ச்சகர்களுக்கு ஊக்கத்தொகை உயர்வு – ரூ.1,000லிருந்து ரூ.3,000 உயர்த்தப்பட்டுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## இந்திய நிகழ்வுகள்

❖ **சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம்**

- முஸ்லீம்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்த சமயத்தினர், சமண சமயத்தவர், பார்சிகள் ஆகிய ஆறு சமுதாயத்தினரை சிறுபான்மையினர் என்று அழைக்கப்படுகின்றனர்.
- 2014 ஆம் ஆண்டில், சிறுபான்மைச் சமூகமாக கடைசியாக அறிவிக்கப்பட்டது சமணர்கள் (Jain) சமூகமாகும்.
- துவக்கம் : 1992
- தலைவர்: முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி இக்பால் சிங் லால்புரா.

❖ **பெண்களின் சட்டபூர்வ திருமண வயதை 21-ஆக உயர்த்த மத்திய அரசு முடிவு**

- சமதா கட்சியின் முன்னாள் தலைவர் ஜெயா ஜேட்லி தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைப்படி, பெண்களின் சட்டபூர்வ திருமண வயதை 18-ல் இருந்து 21-ஆக உயர்த்துவதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

❖ **துர்கா பூஜைக்கு உலக அந்தஸ்து வழங்கிய யுனெஸ்கோ**

- மேற்கு வங்காள மாநிலத்தின் மிக முக்கிய பண்டிகையான துர்கா பூஜை, ஆண்டுதோறும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகை பீகார், ஜார்கண்ட், ஒடிசா உள்ளிட்ட மேலும் சில மாநிலங்களிலும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.
- இந்த சிறப்பு மிக்க பண்டிகை தற்போது யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய அந்தஸ்தையும் பெற்று இருக்கிறது. இதை யுனெஸ்கோ நேற்று அறிவித்தது.

❖ **புதிய வாக்காளராகப் பதிவு செய்ய ஆண்டுக்கு 4 தகுதி நாள்கள்**

- புதிய வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதற்கு ஜனவரி 1, ஏப்ரல் 1, ஜூலை 1, அக்டோபர் 1 ஆகிய நான்கு தேதிகளை தகுதி நாள்களாக நிர்ணயிக்க மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 14 (பி) பிரிவில் திருத்தம் செய்ய திட்டமிட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- தேர்தல் ஆணையம் ஒரு தலைமைத் தேர்தல் ஆணையாளரையும் அவருக்கு உதவியாக மற்ற இரு தேர்தல் ஆணையர்களையும் கொண்டிருக்கும். இவர்களை குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- சரத்து 324 - தேர்தல் ஆணையம் (Election Commission).
- தலைமை தேர்தல் ஆணையர் - ஸ்ரீ சுஷில் சந்திரா

❖ **'ரீ-ஹேப்' புதிய திட்டம்**

- யானைகள் – மனித மோதலைத் தடுக்க சிறிய தேனீக்களைப் பயன்படுத்தி யானைகளை விரட்டும் 'ரீ-ஹேப்' என்ற புதிய திட்டத்தை அஸ்ஸாமில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- யானைகள் செல்லும் வழித்தடத்தில், அவை மனிதர்கள் வசிக்கும் பகுதிக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில், தேனீ வளர்ப்புப் பெட்டிகளை வைத்து, தேனீவேலிகள் அமைக்கப்படும்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இந்த புதுமைத் திட்டம் ஏற்கெனவே கர்நாடகாவில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, தற்போது அஸ்ஸாமிலும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

❖ **சார்தாம் நெடுஞ்சாலைத் திட்டம்**

- உத்தரகண்டில் யமுனோத்திரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய 4 புனிதத் தலங்களை (சார்தாம்) இணைக்க ரூ.12,000 கோடி செலவில் 900 கி.மீ. நீளநெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது. சீன எல்லைவரை செல்லும்விதமாக இந்த நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.

❖ **இந்தியாவின் முதல் பெண் மனநல மருத்துவர் சாரதா மேனன் காலமானார்**

- இவரது சேவையைப் பாராட்டி மத்திய அரசு 1992ஆம் ஆண்டு பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு தமிழக அரசு 'அவ்வை விருது' வழங்கி வழங்கப்பட்டது.

❖ **அணைப் பாதுகாப்பு மசோதா நிறைவேற்றம்**

- அணைப்பாதுகாப்பு மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம், உலக வங்கி மூலம் நிதியுதவி கிடைக்கும். இதன்மூலம் அணை மறுசீரமைப்பு, மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (DRIB) தமிழகம் உள்பட நாட்டிலுள்ள அணைகளில் புரனமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் மக்களவையில் தெரிவித்தார்.

❖ **ஜவாத் புயல்**

- தென்கிழக்கு வங்கக்கடலில் ஜவாத் புயல் கரையை கடந்தது. ஜவாத் என்பது அரபு சொல் (பொருள் தாராளமான இரக்கமுள்ளது) ஜவாத் பெயர் சவுதி அரேபியாவால் வழங்கப்பட்டது.

❖ **பொது கணக்கு குழு (Public Accounts Committee) 100-வது ஆண்டு விழா**

- டிசம்பர் 4, 2021 அன்று பொது கணக்கு குழு அமைக்கப்பட்டதன் 100-வது ஆண்டினை நிறைவு செய்துள்ளது.
- மான்ட்ஃபோர்டு சீர்திருத்தங்கள் என்று அழைக்கப்படும் இந்திய அரசு சட்டம், 1919 இல் முதலில் குறிப்பிடப்பட்ட பின்னர் 1921 இல் பொதுக் கணக்குக் குழு அறிமுகப்படுத்தப்பட்டது.
- மக்களவையில் நடைமுறை மற்றும் நடத்தை விதிகளின்படி, சரத்து 308-ன் கீழ் ஒவ்வொரு ஆண்டும் பொதுக் கணக்குக் குழு அமைக்கப்படுகிறது.
- பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மக்களவை சபாநாயகரால் நியமிக்கப்படுகிறார்.

❖ **ஏர் சுவிதா இணையதளம்**

- கரோனா பாதிப்பு அதிகம் உள்ள நாடுகளிலிருந்து வரும் பயணிகள் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள துவங்க[பட்டது .

❖ **SC / ST துன்புறுத்தலுக்கு கட்டணமில்லா தொலைபேசி - 14566**

- SC / ST துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய உதவி மையம் கட்டணமில்லா தொலைபேசியை – 14566, "மத்திய சமூக நீதி அமைச்சகம்" அறிமுகப்படுத்தியுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **பெண்கள் திருமண வயது 21 – ஜெயா ஜெட்லி குழு**
  - ஜெயா ஜெட்லி தலைமையில் 4 பேர் கொண்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பெண்ணின் திருமண வயதை 18-லிருந்து 21 ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- **சர்வதேச ஆவணப்பட குறும்பட திருவிழா**
  - சர்வதேச ஆவணப்பட குறும்பட திருவிழா புதுச்சேரியில் நடைபெற்றது
- **ஆப்ரேஷன் விஜய்**
  - "ஆப்ரேஷன் விஜய் – போர்ச்சுக்கீசியரிடமிருந்து கோவாவை மீட்க இந்திய அரசின் இராணுவ நடவடிக்கையில் டிசம்பர் 19, 1961-இல் கோவா விடுதலை பெற்றது.
  - டிசம்பர் 19, 2021 கோவா: 60-வது ஆண்டுவிழா.
- **ஐ.நா. உலக உணவு திட்ட ஆராய்ச்சி - நிதி ஆயோக் ஒப்பந்தம்**
  - ஐ.நா. உலக உணவு திட்டத்துடன் ஆராய்ச்சிக்கான உடன்பாட்டில் நிதி ஆயோக் கையொப்பமிட்டுள்ளது.
  - சர்வதேச சிறுதானிய ஆண்டு – 2023
- **இமாச்சலப்பிரதேசத்தில் நான்கு நீர்மின் திட்டங்கள் அடிக்கல்**
  - இமாச்சலப்பிரதேசத்தில் நான்கு நீர்மின் திட்டங்கள் ரூ.9,500 கோடி மதிப்பில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினர்.
  - ரேணுகாஜி அணைத்திட்டம் (சிர்மார் மாவட்டம் - கிரி ஆறு) ஹிமாச்சலப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், ஹரியானா, இராஜஸ்தான், உத்தரக்கண்ட், டெல்லி.
  - லுக்ரி நீர்மின் திட்டம் – ஹமிர்பூர் மாவட்டம், ஹிமாச்சலப்பிரதேசம்.
  - தௌலாசித் நீர்மின்திட்டம் – ஹிமாச்சலப்பிரதேசம்.
  - சாவ்ரா குட்டு நீர்மின் நிலையம் (சிம்லா) தொடங்கி வைத்தார்.
- **உத்திரப்பிரதேசத்தில் DRDO ஆலை**
  - உத்திரப்பிரதேசம், லக்னோவில் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் பரிசோதனை மையம், பிரம்மோஸ் ஏவுகணை தயாரிப்பு நிலையம் ஆகியவை அமைக்கப்பட உள்ளது.
- **மத மாற்றத் தடைச்சட்டம்**
  - கர்நாடகா சட்டசபையில் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- **விஜய் நிவாஷ் தினம்**
  - வங்கதேசத்தின் விடுதலைக்கு காரணமான இந்திய படைகளின் வெற்றி நினைவாக (இந்தியா – பாகிஸ்தான் போர் 1971) கொண்டாடப்படுகிறது.
  - பொன்விழா ஆண்டை குறிக்கும் வகையில் டிசம்பர் 16, 2021 "ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்" என நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# பொருளாதாரம்

- **ஜிஎஸ்டி நிலுவைத் தொகை ரூ.16,725 கோடி**
  - தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய சரக்கு, சேவை வரி (ஜிஎஸ்டி) இழப்பீட்டு நிலுவைத் தொகை ரூ.16,725 கோடியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தில்லியின் நடைபெற்ற கூட்டத்தில் தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வலியுறுத்தினார்.
- **எண்ம பணப்பரிமாற்றத்தை ஊக்குவிக்க ரூ.1,300 கோடி**
  - யுபிஐ, ரூபே டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எண்ம பணப்பரிமாற்றத்தை ஊக்குவிக்க ரூ.1,300 கோடி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- **உற்பத்தி நகரமாக மாறிய குஜராத்**
  - நாட்டின் உற்பத்தி நகரமாக குஜராத் மாநிலம் முன்னேறியுள்ளது. இதுவரை இந்த இடத்தைத் தக்கவைத்திருந்த மகாராஷ்டிர மாநிலம் இரண்டாமிடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் சேவைத்துறையில் முதன்மை மாநில அந்தஸ்த்தை மகாராஷ்டிரா தக்கவைத்துக் கொண்டுள்ளது.
- **ஆசிய வளர்ச்சி வங்கியுடன் கடன் ஒப்பந்தம்**
  - தமிழகம், உத்தரகண்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய வளர்ச்சி வங்கியுடன் (ADB) ரூ.2,074 கோடி மதிப்பிலான இரு கடன் ஒப்பந்தங்களில் மத்திய அரசு கையொப்பமிட்டுள்ளது.
- **தமிழகத்துக்கு 34 லட்சம் மெட்ரிக் டன் தானியம்**
  - ஏழைகளுக்கான உணவு தானிய விநியோகத் திட்டத்தின் கீழ் (பிரதமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா) தமிழகத்துக்கு 34,35,163.56 மெட்ரிக் டன் உணவு தானியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநிலங்களவையில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- **யுனிக்கார்ன் நிறுவன பட்டியல் – இந்தியா 3-வது இடம்**
  - அமெரிக்கா முதலிடம், சீனா 2-வது இடம், இந்தியா 3-வது இடம், பிரிட்டன் 4-வது இடத்திலும் உள்ளன.
  - ஸ்டார்ட் அப் உலகில் 100 கோடி டாலர் மதிப்பை கொண்ட (ரூ.7,500 கோடி) நிறுவனங்களை நிறுவனம் என அழைக்கின்றனர்.
  - இந்திய நகரங்களில் பெங்களூர், மும்பை, புனே, தானே, குருகிராம் ஆகிய முதல் ஐந்து இடங்களில் உள்ளன.
  - இந்திய நிறுவனங்களில் பைஜூஸ் – 2100 கோடி டாலர் (ரூ.1.58 லட்சம் கோடி), இன்மொபி – 1200 கோடி டாலர், ஓயோ – 950 கோடி டாலர் முதல் இடங்களில் உள்ளன.
  - உலகின் இரண்டாவது மிகப்பெரிய ஸ்டார்ட் அப் மையமாக இந்தியா உருவாகியுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## உலக நிகழ்வுகள்

- **பார்படோஸ்: புதிய குடியரசு நாடு உதயம்**
  - கரீபியன் கடலில் மேற்கு இந்தியத் தீவுப் பிராந்தியத்தில் அமைந்துள்ள பார்படோஸ், பிரிட்டன் அரசியின் ஆளுகையிலிருந்து விலகி புதிய குடியரசு நாடாக அறிவித்துள்ளது. இதன் மூலம், உலகின்மிகச் சமீபத்திய குடியரசு நாடாக பார்படோஸ் ஆகியுள்ளது.
- **சர்வதேச நிதியத்தில் கீதா கோபிநாத்துக்கு பதவி உயர்வு**
  - சர்வதேச நிதியத்தின் (IMF) முதல் பெண் தலைமை பொருளாதார நிபுணரான, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கீதா கோபிநாத் அந்த அமைப்பின் துணை நிர்வாக இயக்குநராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.
- **சர்வதேச சிறுதானிய ஆண்டு**
  - தினை வகைகளை பிரபலப்படுத்தும் வகையில் 2023-ம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக ஐ.நா. அறிவித்துள்ளது.
  - உலகம் முழுவதும் 2023-ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக அனுசரிக்கப்படவுள்ளதால் நாடு முழுவதும் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் சிறு தானியங்களின் பயன்பாடு, முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துமாறு யுஜிசி உத்தரவிட்டுள்ளது.
- **பார்படோஸ் – புதிய குடியரசு நாடு உதயம்**
  - கரிபியன் கடலில் மேற்கிந்திய தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள. பார்படோஸ் தீவு, பிரிட்டிஷ் அரசாட்சியின் கீழ் அதிகார மையத்தின் தலைமை பொறுப்பு செயல்பட்டு வந்த நிலையில், தற்போது சுய அதிகாரம் பெற்ற தனி குடியரசு நாடாக பார்படோஸ் தீவு மாறி உள்ளது.
  - 1966-இல் சுதந்திரமடைந்தது.
- **பார்கர் விண்கலம்**
  - 2018 ஆகஸ்ட் மாதம் விண்ணில் செலுத்தப்பட்ட அமெரிக்காவின் நாசா அனுப்பியுள்ள பார்கர் விண்கலம் முதன் முறையாக சூரியனின் வளிமண்டலத்தில் நுழைந்து சாதனை படைத்துள்ளது.
  - 2025 வரை வலம் வரும்.
- பிலிப்பைன்ஸ் நாட்டை ராய் சூறாவளி தாக்கியுள்ளது.
- **உலகில் மிகப்பெரிய தொலைநோக்கி – ஜேம்ஸ் வெப்**
  - உலகில் மிகப்பெரிய சக்தி வாய்ந்த தொலைநோக்கி செயற்கைகோளை தென் அமெரிக்காவின் பிரெஞ்ச் கயானாவிலிருந்து நாசா விண்ணில் செலுத்தியது.
  - நோக்கம் – ஆரம்ப கால நட்சத்திரங்கள் குறித்த ஆய்வு செய்வது, பிரபஞ்சம் குறித்த கூடுதல் தகவல்களை அறிந்து கொள்வதும்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## சுற்றுச்சூழல்

❖ **கிளாஸ்கோ ஒப்பந்தம்**

➢ பருவநிலை மாற்றத்திற்கான கிளாஸ்கோ உச்சிமாநாட்டில், காடுகள், நிலம் ஆகியவற்றின் பயன்பாடுகளை வர்த்தகத்துடன் இணைத்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதால், இந்தியா அந்த ஒப்பந்தந்துக்கு உடன்படவில்லை என மத்திய சுற்றுச்சூழல் வனம், பருவநிலைமாற்றத் துறைக்கான இணையமைச்சர் அஸ்வினி குமார் சௌபே மக்களவையில் தெரிவித்தார்.

➢ மேலும், இந்திய வனம், காடுகளின் பரப்பளவு 24.56 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

❖ **ஆலிவ் ரிட்லி ஆமைகள்**

➢ ஒடிசா கடற்கரையில் உள்ள ருஷிகுல்யா ரூக்கரியில் ஆலிவ் ரிட்லி ஆமைகளை குறியிடுவதை விஞ்ஞானிகள் மீண்டும் தொடங்கியுள்ளனர்.

➢ இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் (ZSI) ஆராய்ச்சியாளர்கள், காஹிர்மாதா, தேவி நதி முகத்துவாரம் மற்றும் ருஷிகுல்யா ஆகிய மூன்று பெரிய கூடு தளங்களில் ஆலிவ் ரிட்லிகளைக் குறியிடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

➢ இந்திய விலங்குகள் கணக்கெடுப்பு நிறுவனம் (Zoological Survey of India), 1916ஆம் ஆண்டு ஜீலை 1ஆம் நாள் நிறுவப்பட்டது.

❖ **ESZ (Eco-sensitive Zones)**

➢ ESZகள் என்பது பாதுகாக்கப்பட்ட பகுதிகள், தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் ஆகியவற்றிலிருந்து 10 கிலோ மீட்டர் வரை நீட்டிக்கப்பட்டுள்ள பகுதியாகும்.

➢ இது உயர் பாதுகாப்புப் பகுதியிலிருந்து குறைவான பாதுகாப்புக் கொண்ட பகுதி வரையில் ஒரு இடைநிலை மண்டலமாக செயல்படுன்கிறது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

❖ **இந்தியாவில் 9 அணு உலைகள்**

➢ 2024-ஆம் ஆண்டில் இந்தியாவில் 9 அணு உலைகள் செயல்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும் 12 அணு உலைகளை அமைப்பதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியுள்ளது. அந்த அணு உலைகள் 9,000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திறன் கொண்டவையாக இருக்கும்.

❖ **சர்வதேச சூரிய சக்திக் கூட்டணிக்கு ஐ.நா பார்வையாளர் அந்தஸ்து**

➢ இந்தியா மற்றும் பிரான்ஸின் முன்முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ள “சர்வதேச சூரிய சக்திக் கூட்டணி” அமைப்புக்கு பார்வையாளர் அந்தஸ்தை ஐ.நா. பொதுச் சபை வழங்கியுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **VL – SRSAM- ஏவுகணை சோதனை வெற்றி**
  - நிலத்திலிருந்து வானிற்கு இலக்கினை தாக்கி அழிக்கும் (50km to 60km வரை) VL – SRSAM- ஏவுகணையை ஒடிஸாவில் DRDO வெற்றிகரமாக சோதனை நடத்தியது.
- **பினாகா ராக்கெட்** (Pinaka Extended Range System) **- DRDO**.
  - நீட்டிக்கப்பட்ட தூர பினாகா பல்முனை ராக்கெட் ஏவுகணை அமைப்பு (Pinaka Extended Range System), பகுதி மறுப்பு வகை வெடி குண்டுகள் மற்றும் உள்நாட்டிலேயே தயரிக்கப்பட்ட ஃப்யூஸ்கள் பல்வேறு இடங்களில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டன.
  - பினாகா ஏவுகணை அமைப்பின் சோதனை பொக்ரானில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) ஆய்வகங்களான கனரக ஆயுதங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (ARDE), புனே மற்றும் உயர் ஆற்றல் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வகம் (HEMRL), புனே ஆகியவை இணைந்து பினாகா ஏவுகணை அமைப்பை வடிவமைத்துள்ளன.
  - பினாகா MK1 – 40 km (இலக்கு)
  - பினாகா MK2 – 60 km (இலக்கு)
  - பினாகா MK3 - கொடுக்கப்படவில்லை

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

- **உலகின் சக்திவாய்ந்த 100 பெண்கள் பட்டியல்**
  - அமெரிக்காவின் பிரபல போர்ப்ஸ் பத்திரிகை, 18-வது ஆண்டாக உலகின் சக்திவாய்ந்த 100 பெண்கள் பட்டியலை வெளியிட்டு உள்ளது.
  - இந்த பட்டியலில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 37-வது இடத்தைப் பிடித்துள்ளார். தொடர்ந்து 3வது ஆண்டாக இந்தப் பட்டியலில் அவர் இடம் பிடித்துள்ளார்.
- **முப்படைத் தளபதி பிபின் ராவத் – விபத்தில் உயிரிழப்பு**
  - டிசம்பர் 8, 2021 அன்று இந்திய விமானப்படையின் எம்.ஐ-17 வி-5 ஹெலிகாப்டரில் (ரஷ்யாவின் கசன் நிறுவனத்தின் தயாரிப்பு) அதை இயக்கும் 4 படை வீரர்கள், 9 படைப்பிரிவை சேர்ந்த இதர வீரர்கள் ஆகியோருடன் பயணித்தார்.
  - நீலகிரி மாவட்டம் குன்னூருக்கு அருகில் உள்ள நஞ்சப்பசத்திரம் என்ற இடத்தில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் ஜெனரல் பிபின் ராவத் அவர்களின் துணைவியார் மதுலிகா ராவத்தும் உயிரிழந்தார்.
- **இந்தியாவின் தண்ணீர் மனிதர்**
  - இராஜஸ்தானைச் சேர்ந்த இராஜேந்திர சிங் இந்தியாவின் தண்ணீர் மனிதர் என்றழைக்கப்படுகிறார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **கேரளாவின் நூலக இயக்கத்தின் தந்தை - P.N. பனிக்கர்**
  - "வாசித்து வளர்ச்சியடைவீர்" என்று மக்களுக்கு வழிகாட்டிய, கேரளாவின் நூலக இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் P.N. பனிக்கரின் சிலையை திருவனந்தபுரம், பூஜப்புராவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.
- **சர்வதேச நிதியத்தின் (IMF) முதல் பெண் தலைமை - கீதா கோபிநாத்**
  - பொருளாதார நிபுணரான கீதா கோபிநாத் (இந்திய வம்சாவளி) சர்வதேச நிதியத்தின் துணை நிர்வாக இயக்குநராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.
- **பிரபஞ்ச அழகியாக இந்தியப் பெண் ஹர்னாஸ் சாந்து தேர்வு**
  - இஸ்ரேல் நாட்டில் நடைபெற்ற பிரபஞ்ச அழகி (மிஸ்யுனிவர்ஸ்) போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த ஹர்னாஸ் சாந்து தேர்வு செய்யப்பட்டார். 21 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பட்டம் இந்தியாவுக்கு கிடைத்துள்ளது.
- **டெஸ்மண்ட் டுட்டு காலமானார்**
  - தென்னாப்பிரிக்காவின் வெள்ளை நிற வெறி எதிர்ப்பின் சின்னமாக திகழ்ந்த டெஸ்மண்ட் டுட்டு காலமானார்.
  - 1984-ஆம் ஆண்டு அமைதிக்காக நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.

## திட்டம்

- **பரம்பராகத் கிரிஷி விகாஸ் யோஜனா**
  - சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் சாகுபடி முறையை ஏற்றுக் கொண்டு அதனை மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவித்தல்.
  - வேளாண்மையில் விளைச்சலை அதிகரிக்க இராசயனங்கள் மற்றும் செயற்கை உரங்கள் மீதான விவசாயிகளின் சார்புடைமையை குறைத்தல்.
  - துவக்கம் : 2015, நோக்கம் : இயற்கை அங்கக வேளாண்மை
- **பிரதமரின் இளம் எழுத்தாளர்கள் திட்டம்**
  - பிரதமரின் இளம் எழுத்தாளர்கள் வழிகாட்டுதல் திட்டத்தின் கீழ் 75 எழுத்தாளர்களை நேஷனல் புக் டிரஸ்ட் தேர்வு செய்துள்ளது. இதில் தமிழில் நூல்களை எழுதிய ஜே.யு.சுகானா, ஜி.சரவணன், கே.கீதா ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- **பிரதமரின் இளம் எழுத்தாளர்கள் வழிகாட்டுதல் திட்டம்**
  - பிரதமரின் இளம் எழுத்தாளர்கள் வழிகாட்டுதல் திட்டத்திற்காக நாடு முழுவதும் 75 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்
  - இதில் தமிழ்நாட்டில் இருந்து J.U. சுஹானா G. சரவணன் K. கீதா ஆகிய 3 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## மாநாடுகள்

❖ **2023-இல் இந்தியா தலைமையில் ஜி20 மாநாடு**

➢ 2023-ஆம் ஆண்டில் ஜி20 நாடுகள் மாநாடு இந்தியா தலைமையில் நடைபெற உள்ளது. அதற்கான இந்தியாவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **அகில இந்திய மேயர்கள் மாநாடு**

➢ உத்தர பிரதேசத்தின் நகர்ப்புற மேம்பாட்டுத்துறையால் வாரணாசியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அகில இந்திய மேயர்கள் மாநாட்டைப் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார்.

➢ இந்த மாநாட்டின் மையப்பொருள் "புதிய நகர்ப்புற இந்தியா".

❖ **சர்வதேச அம்பேத்கார் மாநாடு – டெல்லி**

➢ எஸ்.சி மற்றும் எஸ்.டி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பும், டாக்டர் அம்பேத்கர் வர்த்தக சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 5-வது சர்வதேச அம்பேத்கர் மாநாட்டை, குடியரசுத்தலைவர் திரு ராம் நாத் கோவிந்த், புதுதில்லியில்தொடங்கி வைத்தார்.

❖ **21-வது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாடு**

➢ டிசம்பர் 06, 2021 அன்று புது தில்லியில் நடந்த 21-வது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சிமாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய கூட்டமைப்பின் தலைவர் விளாடிமிர் புடின், கலந்து கொண்டனர்.

➢ 5,000 கோடி மதிப்பில் ரஷ்யாவிலிருந்து அதிநவீன AK203 துப்பாக்கிகள் மற்றும் S-400 ஏவுகணைகளை வாங்க மத்திய அரசு ஒப்பந்தம்.

❖ **இந்தியா நடத்தும் SCO- இணைய பாதுகாப்பு கருத்தரங்கு**

➢ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) - இன் கீழ் இந்தியா நடத்திய இணைய பாதுகாப்பு கருத்தரங்கு புதுடெல்லியில் நடந்தது. இதில் பாகிஸ்தான் பிரதிநிதி பங்கேற்றார்.

➢ SCO துவக்கம் – 2001 ஜூன் 5 – ஷாங்காய் நகர்

## பாதுகாப்பு

❖ **மும்பை ஏவுகணை கப்பல் பிரிவுக்கு சிறப்பு கௌரவம்**

➢ பாகிஸ்தானுடனான 1971-ஆம் ஆண்டு போரின் போது அந்நாட்டு போர்க்கப்பல்களை மூழ்கடித்த இந்திய கடற்படையின் ஏவுகணை கப்பல் பிரிவுக்கு பிரசிடென்ட்ஸ் ஸ்டாண்டர்ட்' என்ற சிறப்பு கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

❖ **கடற்படை தலைமைத் தளபதியாக ஆர்.ஹரிகுமார் பொறுப்பேற்பு**

➢ இந்திய கடற்படையின் 25-வது தலைமைத் தளபதியாக அட்மிரல் ஆர்.ஹரிகுமார் பொறுப்பேற்றார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **முப்படைகளின் தலைமைத் தளபதி விபின் ராவத் உயிரிழப்பு**
  - டிசம்பர் 8 அன்று குன்னூர் அருகே நிகழ்ந்த ராணுவ ஹெலிகாப்டர் விபத்தில் முப்படைகளின் தலைமைத் தளபதி விபின் ராவத் அவரின் மனைவி மதுலிகா ராவத் உள்பட 13 பேர் உயிரிழந்தனர்.
  - விபின் ராவத் சூலூர் விமானப்படைத் தளத்தில் இருந்து எம்ஐ17வி5 ரக ஹெலிகாப்டரில் பயணம் செய்தார்.
  - பாதுகாப்பு படைகளின் தலைமைத் தளபதி என்ற நான்கு நட்சத்திர ஜென்ரல் பதவியிடத்தை உருவாக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
  - முப்படைத் தலைவர்களின் ஊதியம் மற்றும் இதர சலுகைகளுடன் இந்தப் பதவி உருவாக்கப்பட்டுள்ளது.
  - பாதுகாப்பு படைகளின் தலைமைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சகத்தில் புதிதாக உருவாக்கப்படவுள்ள ராணுவ விவகாரங்கள் துறையின் தலைவராகவும், செயலாளராகவும் செயல்படுவார்.
- **2 பாதுகாப்பு தொழில்துறை வழித்தடங்கள் மத்திய அரசு அறிவிப்பு**
  - நாட்டில் 2 பாதுகாப்பு தொழில்துறை வழித்தடங்களை அமைக்க மத்திய அரசு அறிவித்துள்ளது.
  - தமிழ்நாடு - 5 முனையங்கள் (சென்னை, கோவை, ஓசூர், சேலம், திருச்சி)
  - உத்திரப்பிரதேசம் - 6 முனையங்கள் (அலிகர், ஆக்ரா சித்ரகூடம், ஜான்சி கான்பூர், லக்னோ)
- **சந்தாயக் ஆராய்ச்சி கப்பல்**
  - உள்நாட்டு தயாரிக்கப்பட்ட இந்திய கடற்படைக்கான முதலாவது ஆராய்ச்சி கப்பல் "சந்தாயக்" கடலில் இறக்கப்பட்டது.
  - பயன்கள்: ஆழ்கடல் ஆராய்ச்சி, மிதக்கும் மருத்துவமனை, தாக்குதல் கப்பல்.
- **பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை (சந்த்) DRDO**
  - டிசம்பர் 11, 2021 அன்று உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஹெலிகாப்டரில் இருந்து ஏவக்கூடிய சந்த் எனப்படும் தொலைவில் இருந்து தாக்கும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) மற்றும் இந்திய விமானப்படை பொக்ரான் எல்லையில் சோதனை செய்தன.
  - அதிநவீன மில்லி மீட்டர் அலை ரேடார் தேடும் கருவி பொருத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணை, பாதுகாப்பான தூரத்தில் இருந்து அதிக துல்லியமான தாக்கும் திறனை கொண்டுள்ளது. 10 கிமீ தூரம் வரையிலான இலக்குகளை இந்த ஆயுதம் தாக்கும்.
  - டிஆர்டிஓ-வின் இதர ஆய்வகங்கள் மற்றும் தொழில்துறையுடன் இணைந்து ஹைதராபாத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி மையம் இமாரத் இந்த சந்த் ஏவுகணையை வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

- டிஆர்டிஓ தலைவர் : டாக்டர் ஜி சதீஷ் ரெட்டி

❖ **நடுவானில் பாதையை மாற்றும் திறன் கொண்ட பிரெய்லி ஏவுகணை**

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து 150 முதல் 500கிமீ வரை செலுத்தக்கூடிய பிரெய்லி ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் முதன்முறையாக செலுத்தி வெற்றிகரமாக பரிசோதித்தது. ஒடிசாவில் உள்ள ஏபிஜே அப்துல் கலாம் தீவில் இருந்து இந்த ஏவுகணை ஏவி வெற்றிகரமாக பரிசோதித்தது.
- இந்த ஏவுகணை நிர்ணையிக்கப்பட்ட இலக்கை துல்லியமாக தாக்கியது. அதிநவீன ஏவுணையான பிரெய்லி இடைமறிக்கும் ஏவுகணைகளை முறியடிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.
- குறிப்பிட்ட தொலைவு சென்ற பிறகு நடுவானில் தனது பாதையை மாற்றி செல்லும் திறன் கொண்டது இந்த பாலிஸ்டிக் ரக ஏவுகணையாகும்.

❖ **INS – குக்ரி இந்திய கடற்படையின் தாக்குதல் கப்பல் விடைபெற்றது**

- INS குக்ரி ஒரு ஏவுகணைத் தாங்கிக் கப்பல் ஆகும். இந்தக் கப்பல் கடற்படையில் 32 ஆண்டுகள் பணிபுரிந்த பின் கடந்த டிசம்பர் 23ஆம் தேதி பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டது. கிழக்கு கப்பல் படை, மேற்கு கப்பல் படை இரண்டிலும் பணிபுரிந்த பெருமை ஐஎன்எஸ் குக்ரிக்கு உண்டு.

## விருதுகள்

❖ **கோயங்கா விருது**

- 'தி இந்து" பத்திரிகையின் செய்தியாளர் சிவ் சஹாய் சிங், ராம்நாத் கோயங்கா விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 'கண்ணுக்கு தெரியாத இந்தியாவை வெளிக்கொணர்தல்' என்ற பிரிவின் கீழ் விருதுக்கு சிவ் சஹாய் சிங் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

❖ **சாகித்திய அகாதெமி விருதுகள் - 2021**

- சாகித்திய அகாதெமி விருது 2021, அம்பை சி,எஸ். லட்சுமி – "சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை" (சிறுகதை தொகுப்பு)
- பால சாகித்திய விருது 2021 (பால சாகித்திய புரஸ்கர் விருது) மு. முருகேஷ் "அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை" (சிறுகதைத் தொகுப்பு)
- டி.இ.எஸ். ராகவன் – திருக்குறளை ஹிந்தியில் மொழி பெயர்த்தார்.
- ரவீந்திரநாத் தாகூரின் கோரா நாவல் தமிழில் மொழிபெயர்ப்பு – க. செல்லப்பன்

❖ **அஞ்சு பாபி ஜார்ஜுக்கு விருது**

- உலக தடகள் அமைப்பு சார்பில் இந்த ஆண்டின் சிறந்த பெண்மணிக்கான விருது புகழ் பெற்ற இந்திய முன்னாள் தடகள நட்சத்திர வீராங்கனையான அஞ்சு பாபி ஜார்ஜுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- **இந்திய கலாசார திட்டத்துக்கு யுனெஸ்கோவின் இரட்டை விருது**
  - தில்லியின் நிஜாமுதீன் பஸ்தி சமூகத்தினரின் கலாசார மரபுப் பாதுகாப்புத் திட்டத்துக்கு யுனெஸ்கோவின் 2 விருதுகள் கிடைத்துள்ளன.
  - ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சிறப்பான மரபுப் பாதுகாப்புத் திட்டம், நீடித்த வளர்ச்சிக்கான திட்டம் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் இந்தத் திட்டத்துக்கு யுனெஸ்கோவின் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- **சர்வதேச கணிதவியல் விருது**
  - அமெரிக்கக் கணிதவியல் சங்கத்தின் விருதுக்கு இந்திய-அமெரிக்கப் பேராசிரியரான நிகில் ஸ்ரீவாஸ்தவா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- **பேலோன் தோர் விருது (2021)**
  - கால்பந்து விளையாட்டின் கௌரவமிக்க விருதாகும்.
  - லயோனல் மெஸ்ஸி (ஆடவர்), அர்ஜெண்டினா (7வது முறை)
  - அலெக்ஸியா புடெலாஸ் (மகளிர்), ஸ்பெயின்
- **மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பான சேவை விருது**
  - மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகம் வழங்கியது
  - மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பான சேவை வழங்கியதற்காக முதல் மாநில விருது – தமிழ்நாடு
  - மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு சேவைகளை வழங்குவதில் நாட்டிலேயே சிறந்த மாவட்டமாக சேலம் மாவட்டத்திற்கு விருது
  - சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் – டிசம்பர் 3
  - தமிழ்நாடு விருது – சமூக பணியாளர் விருது – ஸ்மிதா சாந்தகுமார் சதாசிவம்
  - சிறந்த ஆசிரியர் – ரா. ஜெயந்தி, ந. மாரியம்மாள்
  - சிறந்த நிறுவனம் – சப்தகிரி மறுவாழ்வு அறக்கட்டளை (விருதுநகர் மாவட்டம்)
- **தமிழ் இசை சங்கத்தின் விருது**
  - இசைப்பேரறிஞர் பட்டம் – சேஷம்பட்டி டி. சிவலிங்கம்
  - பண்இசைப்பேரறிஞர் பட்டம்- ஆலவாய் பொன். மு.முத்துக்குமார்.
- **சைப்ரியன் போயஸ் விருது – 2021**
  - 2021-ம் ஆண்டுக்கான சைப்ரியன் போயஸ் விருது கணித பேராசிரியர் நிகில் ஸ்ரீவாஸ்தவாவுக்கு அமெரிக்க கணிதவியல் சங்கம் வழங்கியுள்ளது.
- **“ஆர்டர் ஆஃப் தி ட்ரூக் கியால்போ” விருது**
  - பிரதமர் மோடிக்கு பூடான் அரசின் உயரிய விருதான “ஆர்டர் ஆஃப் தி ட்ரூக் கியால்போ” விருது வழங்கப்பட்டுள்ளது.
  - பூடான் தனது 114-ஆவது தேசிய தினத்தை கொண்டாடியது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **சிறந்த தென் ஆப்ரிக்க விருது 2021 - இம்தியாஸ் சூலிமான்**
  - 2021-ம் ஆண்டுக்கான சிறந்த தென் ஆப்ரிக்க விருது இந்திய வம்சாவளியான இம்தியாஸ் சூலிமானுக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - இவர் "Gift of the Givers" (கொடுப்பவர்களின் பரிசு) எனும் அமைப்பை நடத்தி வருகிறார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **வாள்வீச்சு 4 உலகக் கோப்பை**
  - இந்திய வாள்வீச்சு வீராங்கனை (ஃபென்சிங்) ஒலிம்பியன் பவானி தேவி 2022-ஆம் ஆண்டில் நான்கு உலகக் கோப்பை போட்டிகளில் பங்கேற்கிறார்.
  - சென்னையைச் சேர்ந்தவரான சிஏச். பவானி தேவி டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றார்.
- **ஆசிய இளையோர் பாரா விளையாட்டுப் போட்டி**
  - பக்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் பாரா விளையாட்டுப் போட்டியில் இந்தியா 12 தங்கம் உட்பட 41 பதக்கங்கள் வென்றது.
- **உலக பேட்மிட்டன் சாம்பியன்ஷிப் - கிடாம்பி ஸ்ரீகாந்த் பதக்கம்**
  - ஸ்பெயினின், ஹுயல்வா நகரில் நடைபெற்ற உலக பேட்மிட்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் "கிடாம்பி ஸ்ரீகாந்த்" – வெள்ளிப்பதக்கம் வென்றார். இப்போட்டியில் முதல் பதக்கம் வென்ற இந்திய வீரர் என்ற சாதனை படைத்தார்.

## புள்ளி விவரம்

- **நல்லாட்சி மாநில பட்டியல் 2021**
  - இந்தியாவின் ஒட்டு மொத்த நல்லாட்சி குறியீட்டில் யூனியன் பிரதேசங்களில் டெல்லி முதலிடமும், மாநிலங்களில் குஜராத் முதலிடமும், பெற்றுள்ளன.
  - நீதித்துறை பொது பாதுகாப்பு – தமிழகம் முதலிடம்
  - நல்லாட்சி தினம் – டிசம்பர் 25 (வாஜ்பாய் பிறந்தநாள்)
- **நான்காவது சுகாதாரக் குறியீடு – நிதி ஆயோக் வெளியீடு – 2019-20**
  - கேரளா – முதலிடம்; தமிழ்நாடு – 2-வது இடம்; தெலுங்கானா – 3-வது இடம் (பெரிய மாநிலங்கள்).
  - மிசோரம் – முதலிடம்; திரிபுரா – 2-வது இடம்; சிக்கிம் – 3-வது இடம் (சிறிய மாநிலங்கள்)
  - யூனியன் பிரதேசங்கள் – தாதர் நாகர் ஹவேலி – முதலிடம்; சண்டிகர் – 2-வது இடம்; லட்சத்தீவு – 3-வது இடம்.
  - கேரளா தொடர்ந்து 4-வது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
  - மத்திய சுகாதார அமைச்சகம், உலக வங்கி ஆகியவற்றுடன் இணைந்து இந்தக் குறியீட்டை நிதி ஆயோக் தயாரித்துள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- மாநில சுகாதாரக் குறியீடு என்பது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான வருடாந்திர கருவியாகும். 'சுகாதார விளைவுகள்', 'ஆளுமை மற்றும் தகவல்' மற்றும் 'முக்கிய உள்ளீடுகள்/செயல்முறைகள்' ஆகிய பிரிவுகளின் கீழ் தொகுக்கப்பட்ட 24 குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட கூட்டுக் குறியீடு இதுவாகும்.
- நிதி ஆயோக் (National Institution for Transforming India) திட்டக்குழுவுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
- ஜனவரி 1, 2015 முதல் நடைமுறைக்கு வந்தது.

## புத்தகம்

❖ **"ஜஸ்டிஸ் பாஃர் தி ஜட்ஜ்" (Justice for the Judge)**

- "ஜஸ்டிஸ் பாஃர் தி ஜட்ஜ்" புத்தகமானது இந்தியாவின் முன்னாள் 46-வது தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் எழுதிய வாழ்க்கை சுயவரலாறு புத்தகமாகும்.

## முக்கிய தினம்

1. டிசம்பர் 1 - உலக எய்ட்ஸ் தினம்
2. டிசம்பர் 2 - தேசிய மாசுக்கட்டுபாடு தினம்
3. டிசம்பர் 2 - சர்வதேச அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான தினம்
4. டிசம்பர் 3 - சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்
5. டிசம்பர் 4 - இந்திய கடற்படை தினம்
6. டிசம்பர் 4 - இந்திய கடற்படை தினம்
7. டிசம்பர் 7 - சர்வதேச வான்வழிப் போக்குவரத்து தினம்
8. டிசம்பர் 8 - சார்க் சாசன தினம்
9. டிசம்பர் 9 - சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம்
10. டிசம்பர் 10 - சர்வதேச மனித உரிமைகள் நாள்
11. டிசம்பர் 11 - சர்வதேச மலை தினம்
12. டிசம்பர் 11 - UNICEF தினம்
13. டிசம்பர் 12 - சர்வதேச பொதுச் சுகாதார வசதி திட்ட தினம்
14. டிசம்பர் 14 - தேசிய ஆற்றல் பாதுகாப்பு தினம்
15. டிசம்பர் 16 - விஜய் நிவாஷ் தினம்
16. டிசம்பர் 18 - சிறுபான்மையினர் உரிமைகள் தினம்
17. டிசம்பர் 18 - சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம்
18. டிசம்பர் 18 - இந்திய சிறுபான்மையினர் உரிமை தினம்
19. டிசம்பர் 20 - சர்வதேச மனித ஒற்றுமை தினம்
20. டிசம்பர் 22 - தேசிய கணிதவியல் தினம்
21. டிசம்பர் 23 - தேசிய உழவர் நாள்
22. டிசம்பர் 24 - தேசிய நுகர்வோர் உரிமைகள் தினம்
23. டிசம்பர் 25 - நல்லாட்சி தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com